ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்று
EELAM TAMIL RIGHTS ASSEMBLY
tamilassembly.org

**மட்டக்களப்பு**
**ஒக்ரோபர் 05, 2026**

**ஊடக அறிக்கை**

## ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்றின் செயலாளர் அமரர் வனிதா சேனாதிராஜாவுக்கான உண்மையான நினைவேந்தல், அவர் விட்டுச்சென்ற பணியைச் செவ்வனே செய்துமுடிப்பதே!

2026 பெப்ரவரி 14ஆம் நாள் திருக்கோணமலையில், ஈழத் தமிழர் தேசத்துக்கான அரசியல் வேணவா குறித்த தீர்மானத்தின் செம்மைப்படுத்தப்படவேண்டிய முன்வெளியீட்டு வடிவம் (Advance Unedited Version) வெளியிடப்பட்டது. அத்தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்வதோடு, ஈழத் தமிழர் கூட்டு உரிமைகள் தொடர்பான மக்கள் மட்டச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் ஓர் அமைப்பு தேவை என்ற நோக்கில், ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்று (Eelam Tamils' Rights Assembly – ETRA) என்ற அமைப்பைக் கட்டியெழுப்பும் முன்னாயத்த வேலைகளும் அப்போதே தொடங்கப்பட்டிருந்தன.

இப்பணிக்கான தன்னார்வச் செயலாளராகச் செயற்பட வவுனியாவைச் சேர்ந்த அமரர் வனிதா சேனாதிராஜா (வயது 41) முன்வந்திருந்தார்.

அவரது இருமொழிப் புலமை, ஈழத் தமிழர் தேசியச் செயற்பாட்டில் மக்கள் மட்டத்தில் அவர் ஈடுபட்டுவந்த பின்னணி, கலை இலக்கிய வெளிப்பாடுகளில் அவர் காட்டிவந்த ஆர்வம், ஆசிரியராக வழிநடத்தும் தகைமை, கூட்டங்களை நடாத்துவதிலும் ஊடகங்களில் கருத்துக்களை முன்வைப்பதிலும் அவருக்கு இருந்த திறமை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அந்நகர்வின் செயலாளராக அவர் பரிந்துரைக்கப்பட்டிருந்தார். தீர்மானத்தின் செம்மைப்படுத்தப்பட்ட வடிவத்தை இறுதிப்படுத்துவதற்கு முன்பாக மக்கள் கருத்துக்களைப் பெற்றுத் தருவதற்கும், உரிமைகள் பெருமன்றை ஒரு மக்கள் மட்ட அமைப்பாக்குவதற்கும் அவரே மிகப் பொருத்தமானவர் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வனிதா சேனாதிராஜா அப்பணியை ஏற்றுக்கொண்டபோதே, அந்த அமைப்பு உருவாக்கம் முழுமையான தன்னுரிமைப் பரப்பில் நிகழவேண்டும் என்பதிலும், முழுமையாக மக்கள்மயப்பட்ட தாயகத்தை மையப்படுத்திய அமைப்பாக அது கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதிலும் தெளிவாக இருந்த அவர் தனது பணியை வெளிப்படைத் தன்மையோடு முன்னெடுத்துவந்தார்.

மாவட்ட ரீதியான கூட்டங்களை இரண்டு வகையாக முன்னெடுப்பதில் அவர் அயராது உழைத்தார்: ஒன்று, மாவட்ட அறிமுகக் கூட்டங்கள் (district meetings); இரண்டாவது, அடிமட்டச் சிறுகுழுச் சந்திப்புகள் (pocket meetings).

யாழ்ப்பாண மாவட்டத்தைத் தவிர வடக்கு-கிழக்கிலுள்ள ஏனைய அனைத்து மாவட்ட மட்டக் கூட்டங்களையும் அவர் நிறைவு செய்ததோடு, யாழ்ப்பாண மாவட்ட நடவடிக்கைகளுக்கான தயாரிப்புகளையும் மேற்கொண்டு வந்தார். அதேவேளை, செம்மைப்படுத்தப்படவேண்டிய தீர்மானம் தொடர்பான கருத்துக்களையும் சேகரித்து, இணையவழியாக நேர்த்தியாகச் சுவடிப்படுத்தினார். இவ்விரு பணிகளும் தன்னுரிமையானவையாக முன்னெடுக்கப்பட்டன. இம்முனைப்பில் அவர் மிகுந்த ஈடுபாட்டோடு செயலாற்றினார்.

2026 மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு உரிமைகள் பெருமன்று சார்பாக அவர் ஓர் அறிக்கையை எழுத்துப்பதிவாகவும் ஒளிப்பதிவாகவும் முன்வைத்தார். சொற்கட்டுப் பாடகர் சங்கீத்சன் கைது தொடர்பாகக் குரல்கொடுத்து மக்கள் போராட்டங்களிலும் பங்கேற்றார். காணாமலாக்கப்பட்டோருக்கான நீதிப் போராட்டங்களிலும் அவர் கலந்துகொண்டிருந்தார். இவை பொதுவெளியில் அவரது செயற்பாட்டுக்கும் சிந்தனைக்கும் சான்றுகளாக விளங்குகின்றன.

எமது அமைப்பின் சார்பாக அவர் பொதுவெளியில் கலந்துகொண்ட இறுதி நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் ஜூன் 20ஆம் நாள் நடைபெற்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆம் ஆண்டு நிகழ்வாகும். தொடர்ந்தும் உள்ளார்ந்த செயற்பாட்டிலும் தொடர்பாடலிலும் அவர் இயங்கிவந்தார்.

இந்நிலையில், அவரது சொந்த இடமான வவுனியாவுக்கு மிகத் தொலைவில் உள்ள மின்னேரியாப் பகுதியில் அவரது உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது என்ற துயரச் செய்தி, செப்டம்பர் 23ஆம் திகதி காட்டுத்தீ போலச் சமூக வலைத் தளங்களில் பரவத் தொடங்கியது. இத்துயரம் அவரை நன்கு அறிந்தவர்களை மட்டுமன்றி, அவரது செயற் பாடுகளில் மாவட்ட ரீதியாகக் கலந்துகொண்ட அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. இது எவ்வாறு நேர்ந்தது, ஏன் நிகழ்ந்தது என்ற அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளமுடியாதவர்களாகப் பலர் உள்ளோம்.

ஈழத்தமிழர் உரிமைகள் பெருமன்றில் அவர் ஆற்றிய நடவடிக்கைகள் அனைத்தும், அனைத்துலகச் சட்டங்கள் உறுதிசெய்யும் கூட்டு உரிமைகள் சார்ந்தவையாகவும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகிய வற்றுக்கு உட்பட்டவையாகவும் அமைந்திருந்தன. இது தொடர்பான தெளிவான அறிவு அவரிடம் இருந்தது. மிகுந்த வாசிப்பும், ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிப் புலமையும் அவருக்கு இருந்தன.

அரசியல், கலை, இலக்கியச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த ஒருவரின் அவலச் சாவு, மக்கள் தரப்பால் மட்டுமன்றி எமது அமைப்பாலும் கேள்விகளுக்கு உட்படுத்தப்படுகிறது என்றால், அவரது குடும்பத்தினர் எவ்வளவு தூரம் மன அழுத்தங்களுக்கு உள்ளாகியிருப்பர், அவரிடம் கல்விகற்ற இளவயதினரை இது எவ்வாறு பாதித்திருக்கும் என்பது சொற்களால் எழுதிவிட இயலாத சுமையாகும்.

இத்தருணத்தில் வனிதா சேனாதிராஜா அவர்களின் குடும்பத்தாரதும் உறவினரதும் இதர நண்பர்கள் அனைவரதும் கரங்களையும் நாம் இறுகப்பற்றி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வனிதா சேனாதிராஜா எந்தவித ஆயுதப் போராட்டப் பின்னணியும் அற்றவர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டமோ வேறெந்த இலங்கைச் சட்டங்களாலோ நாமறிய அவர் குறிவைக்கப்பட்டிருக்கவில்லை. அப்படியான எச்சரிக்கைச் செய்திகள் எதையும் அவர் எம்மோடு பரிமாறியிருக்கவுமில்லை. இருந்தபோதும், மனித உரிமைச் செயற்பாட்டா ளர்கள் குறிவைக்கப்படும் சூழல் காணப்படுவதால் இவரது இறப்புத் தொடர்பில் தக்க அதிகாரத் தரப்புகள் முறையாக விசாரணையை முன்னெடுக்கவேண்டும்.

மின்னேரியா பகுதியில் வதை முகாம்கள் கடந்த காலங்களில் இயங்கியிருந்தன என்பதும், குறிப்பாக இலங்கை இராணுவத் தரப்பு, துணை இராணுவக் குழுக்கள் மற்றும் வெள்ளை வாகன ஆட்கடத்தல்களோடு தொடர்புபட்ட மறைமுக தரப்புகள் அந்த முகாம்களை இயக்கியிருந்தன என்பதும் ஐ.நா. மனித உரிமை அறிக்கைகள் மற்றும் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களால் சுட்டிக்காட்டப்பட்டுவந்துள்ள பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது வனிதா சேனாதிராஜாவின் உயிரிழப்பு பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

இவரது மரணம் தொடர்பில் சான்றுப் பொருட்கள் மூலமான ஆய்வையும் மரணம் நடைபெற்ற இடத்தில் கிடைத்த கடிதம் தொடர்பான உண்மைத் தன்மையைக் கண்டறிவதில் காவற்துறையும் சட்டத்துறையும் தமது கடமையை நேர்த்தியாகச் செய்யவேண்டும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பு. இது தொடர்பில் இலங்கை அரசின் உயர்மட்டம் கவனம் செலுத்தத் தவறின், மேலும் வலுக்கும் சந்தேகங்களை அது எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

**அதேவேளை, ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இத்துறைகள் நீதியாக இயங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு உலகறிந்த ஒன்றாதலால், இவ்வுயிரிழப்பு தொடர்பில் அனைத்துலக மட்டத்திலும் காலந்தாழ்த்தாத உயர் கவனம் ஏற்படுத்தப்படவேண்டும் என்று எமது அமைப்பின் சார்பாக அனைத்து மனித உரிமைத் தரப்புகளையும் வேண்டிக் கொள்கிறோம்.**

வனிதா சேனாதிராஜா சேகரித்துத் தந்துள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானத்தின் செம்மைப் படுத்தப்பட்ட வடிவத்தை இறுதிப்படுத்துவதே, அவர் ஆற்றிய பணிக்கு நாம் செய்யும் உண்மையான, பொருள் பொதிந்த நினைவேந்தலாகும்.

இதற்கு அப்பால், ETRA அமைப்பு உருவாக்க முன்னெடுப்பு பற்றிய அடுத்த கட்ட நடவடிக்கைகள், அனைவ ரோடும் உரிய முறையில் கலந்துரையாடிய பின்னர் அறியத்தரப்படும்.

**இவ்வண்ணம்**

05/10/2026

**அருட்தந்தை லூக் ஜோன்**
*ETRA மட்டக்களப்பு மாவட்டச் செயலணி*

**துரைராசா கசேந்திரன்**
*ETRA வட அமெரிக்கத் தொடர்பாளர்*

Batticaloa
5 October 2026

MEDIA STATEMENT

# The real tribute to the late Vanitha Senathirajah, Secretary of the Eelam Tamil Rights Assembly, is to faithfully complete the work she left behind

On 14 February 2026, in Trincomalee, the Advance Unedited Version of the Resolution on the Political Aspirations of the nation of Eelam Tamils was released, and preparatory work began to build the Eelam Tamil Rights Assembly (ETRA). It rested on the recognition that an organisation was needed to carry the Resolution forward and advance grassroots action on the collective rights of the Eelam Tamils.

Vanitha Senathirajah (41), from Vavuniya, came forward to function as the voluntary secretary for this project.

She was recommended for the position on the grounds of her proficiency in both languages, her background of taking part at a grassroots level in Eelam Tamil national activities, her continued interest in artistic and literary expression, her reputation as a teacher capable of helping and guiding others, and her ability to conduct meetings and put forward views via the media. She was recognised as the person best suited to collect the people's opinions before the edited Resolution was released and to develop ETRA into a people-based organisation.

As soon as she agreed to take on the task, she was clear that ETRA should be established independently as a fully people-based, homeland-centred organisation. She carried out her work in that spirit and with transparency.

She put in endless effort to hold district-level meetings in two forms: district introductory meetings and grassroots small-group gatherings, also known as pocket meetings.

She held district meetings in all districts of the North-East except Jaffna, and she was preparing for Jaffna. Meanwhile, she compiled people's opinions on the Resolution, which still needed editing, and meticulously recorded them online. She undertook both tasks independently and remained committed to doing so.

At the commemoration of Mullivaaykkaal on 18 May 2026, she prepared and issued a written and video statement for ETRA. She expressed her opposition to the arrest of the rap artist Sangeethsan and took part in the protests demanding his release, as well as participating in the protests organised by the kith and kin of the persons subjected to enforced disappearances. These stand as public testimony to her activism and her convictions.

The last public event she attended on behalf of our organisation was the commemoration of the fiftieth anniversary of the Vaddukkoddai Resolution, held in Jaffna on 20 June. She remained active in the organisation's internal work and communications also after that.

On 23 September, news of her death in the Minneriya area, far from her home in Vavuniya, spread rapidly on social media. The loss has deeply shocked those who knew her well, as well as everyone who took part in her work in the various districts. We still have not got over the shock of what happened and why.

All the activities she undertook through ETRA concerned rights guaranteed under international law; they fell within the areas of freedom of expression, collective rights, and freedom of assembly, and she was fully aware of this. She was a great reader and fluent in both English and Tamil.

The circumstances of her tragic death are now being questioned by the people and by our organisation alike. She was engaged in political, artistic and literary work. What this must mean for her family, and for the young people she taught, is a burden beyond words.
At this hour, we stand with Vanitha Senathirajah's family, her relatives and her friends, extending our deepest condolences.

Vanitha Senathirajah had no background at all in armed struggle; to our knowledge, she had not been the subject of any action under the Prevention of Terrorism Act or any other Sri Lankan law, and she had not passed on any such warning to us. Yet, given the present atmosphere, human rights defenders are being targeted, and it is therefore necessary for the relevant authorities to carry out a proper inquiry into her death.

Her death has given rise to grave suspicion, given what is known about the Minneriya area, particularly in relation to the Sri Lankan military. UN human rights reports and international human rights organisations have reported that torture camps operated there in the past. They have stated that these camps were run by the Sri Lankan military, paramilitary groups, and covert elements linked to the white-van abductions.

All expect the police and legal authorities to discharge their duty diligently in two respects. They must carry out a forensic analysis of the evidence relating to her death. They must also establish the authenticity of the letter found where she died. If the highest levels of the Sri Lankan state fail to act, the suspicions they face will only grow.

The world knows these institutions do not function justly for Eelam Tamils. On behalf of our organisation, we therefore call upon all human rights bodies to give this death the closest attention at the international level and act without delay.

Vanitha Senathirajah collected the people's opinions and views and passed them on. The only genuine and significant way to proceed is to finalise the Resolution based on these, and we call on all concerned to do so now.

Beyond this, we will announce the next steps towards establishing ETRA once we have consulted all concerned.

Issued on behalf of the Eelam Tamil Rights Assembly by:

N. Luke — 05/10/2026

Rev. Fr. Luke John
ETRA Batticaloa District Task Force

Kasendran Thurairasa
ETRA North America Liaison

ETRA
ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்றம்
EELAM TAMIL RIGHTS ASSEMBLY
tamilassembly.org

මඩකළපුව
2026 ඔක්තෝබර් 5

**මාධ්‍ය නිවේදනය**

## ඊළම් දෙමළ අයිතිවාසිකම් සභාවේ ලේකම්, අභාවප්‍රාප්ත වනිතා සේනාධිරාජාට කළ හැකි සැබෑ උපහාරය, ඇය ඉතිරි කර ගිය කාර්යය අවංකව කැප වී නිම කිරීමයි

ඊළම් දෙමළ ජාතික ප්‍රජාවේ දේශපාලන අභිලාෂයන් පිළිබඳ යෝජනාවේ සංස්කරණය නොකළ පෙරටු පිටපත (Advance Unedited Version) 2026 පෙබරවාරි 14 වැනි දින ත්‍රිකුණාමලයේදී නිකුත් කෙරුණු අතර ඊළම් දෙමළ අයිතිවාසිකම් සභාව (ETRA) ගොඩනැගීමේ මූලික කටයුතු ද ආරම්භ විය. යෝජනාව ඉදිරියට ගෙන යාම සඳහාත්, ඊළම් දෙමළ ජනයාගේ සාමූහික අයිතිවාසිකම් පිළිබඳ බිම් මට්ටමේ ක්‍රියාකාරකම් ඉදිරියට ගෙන යාම සඳහාත් සංවිධානයක් අවශ්‍ය බවට ඇතිකරගත් අවබෝධය මත එය පදනම් විය.

වවුනියාවේ වනිතා සේනාධිරාජා මෙම ව්‍යාපෘතියේ ස්වේච්ඡා ලේකම්වරිය ලෙස කටයුතු කිරීමට ඉදිරිපත් වූවාය. භාෂා දෙකෙහිම ඇයට තිබූ ප්‍රවීණතාව, ඊළම් දෙමළ ජාතික ක්‍රියාකාරකම්වලට මහජන මට්ටමින් සහභාගී වූ ඇයගේ පසුබිම, කලා හා සාහිත්‍ය ප්‍රකාශනය කෙරෙහි ඇයට තිබූ අඛණ්ඩ උනන්දුව, අන් අයට උපකාර කරමින් මඟ පෙන්විය හැකි ගුරුවරියක ලෙස ඇයට තිබූ කීර්තිය, රැස්වීම් පැවැත්වීමට සහ මාධ්‍ය ඔස්සේ අදහස් ඉදිරිපත් කිරීමට ඇයට තිබූ හැකියාව යන කරුණු මත ඇය එම තනතුරට නිර්දේශ කෙරිණි. සංස්කරණය කළ යෝජනාව නිකුත් කිරීමට පෙර ජනතාවගේ අදහස් රැස් කිරීමටත්, ETRA මහජනයා පදනම් කරගත් සංවිධානයක් බවට වර්ධනය කිරීමටත් වඩාත්ම සුදුසු පුද්ගලයා ඇය බව පිළිගැනිණි.

එම කාර්යය භාරගත් මොහොතේ සිටම, ETRA ස්වාධීනව, සම්පූර්ණයෙන්ම මහජනයා පදනම් කරගත්තා වූද, මව්බිම කේන්ද්‍ර කරගත්තා වූද සංවිධානයක් ලෙස පිහිටුවිය යුතු බව ඇය පැහැදිලිව වටහාගෙන සිටියාය. ඇය සිය කාර්යය එම ආකල්පය පෙරදැරිව හා විනිවිදභාවයෙන් යුතුව ඉටු කළාය.

දිස්ත්‍රික් මට්ටමේ රැස්වීම් ආකාර දෙකකින් පැවැත්වීමට ඇය නොපසුබට උත්සාහයක් දැරුවාය. එනම්, දිස්ත්‍රික් හඳුන්වාදීමේ රැස්වීම් සහ "පොකට් රැස්වීම්" (pocket meetings) ලෙස ද හැඳින්වෙන බිම් මට්ටමේ කුඩා කණ්ඩායම් හමුවීම් ය.

යාපනය හැර උතුරු-නැගෙනහිර සියලු දිස්ත්‍රික්කවල ඇය දිස්ත්‍රික් රැස්වීම් පැවැත්වූ අතර, යාපනය සඳහා සූදානම් වෙමින් සිටියාය. ඒ අතරතුර, තවමත් සංස්කරණය කළ යුතුව තිබූ යෝජනාව පිළිබඳ ජනතා අදහස් ඇය රැස් කළ අතර, ඒවා ඉතා සුපරීක්ෂාකාරීව අන්තර්ජාලය ඔස්සේ වාර්තාගත කළාය. ඇය මෙම කාර්යයන් දෙකම ස්වාධීනව ඉටු කළ අතර, ඒ සඳහා අඛණ්ඩව කැපවී සිටියාය.

2026 මැයි 18 මුල්ලිවයික්කාල් සමරුව නිමිත්තෙන් ඇය ETRA වෙනුවෙන් ලිඛිත සහ වීඩියෝ ප්‍රකාශයක් සකස් කර නිකුත් කළාය. රැප් කලාකරු සංගීත්සන් අත්අඩංගුවට ගැනීමට එරෙහිව හඬ නැගූ ඇය, ඔහු නිදහස් කරන ලෙස ඉල්ලා පැවති විරෝධතාවලටත්, බලහත්කාරයෙන් අතුරුදහන් කරනු ලැබූවන්ගේ ඥාතීන් සංවිධානය කළ විරෝධතාවලටත් සහභාගී වූවාය. මේවා ඇයගේ ක්‍රියාකාරීත්වයට සහ ස්ථාවරයන්ට ප්‍රසිද්ධ සාක්ෂි වේ.

අපගේ සංවිධානය වෙනුවෙන් ඇය සහභාගී වූ අවසාන ප්‍රසිද්ධ උත්සවය වූයේ ජූනි 20 වැනි දින යාපනයේදී පැවැත්වූ වඩ්ඩුක්කෝඩ්ඩෙයි යෝජනාවේ පනස් වැනි සංවත්සර සමරුවයි. ඉන් පසුව ද ඇය සංවිධානයේ අභ්‍යන්තර කටයුතුවල සහ සන්නිවේදන කාර්යයන්හි ක්‍රියාකාරීව නිරත වූවාය.

සැප්තැම්බර් 23 වැනි දින, ඇයගේ නිවස පිහිටි වවුනියාවේ සිට බොහෝ දුරින් පිහිටි මින්නේරිය ප්‍රදේශයේදී ඇය මියගිය බවට වූ පුවත සමාජ මාධ්‍ය ඔස්සේ වේගයෙන් පැතිර ගියේය. මෙම අහිමිවීම ඇය හොඳින් දැන සිටි අයටත්, විවිධ දිස්ත්‍රික්කවල ඇයගේ කටයුතුවලට සහභාගී වූ සියලු දෙනාටත් දැඩි කම්පනයක් ඇති කර තිබේ. සිදු වූයේ කුමක්ද, එය සිදු වූයේ ඇයි යන කම්පනයෙන් අප තවමත් මිදී නැත.

ETRA
ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்றம்
EELAM TAMIL RIGHTS ASSEMBLY
tamilassembly.org

ETRA හරහා ඇය සිදු කළ සියලු ක්‍රියාකාරකම් ජාත්‍යන්තර නීතිය යටතේ සහතික කෙරෙන අයිතිවාසිකම් හා සම්බන්ධ ඒවා විය. ඒවා භාෂණයේ නිදහස, සාමූහික අයිතිවාසිකම් සහ රැස්වීමේ නිදහස යන ක්ෂේත්‍රවලට අයත් වූ අතර, ඇය ඒ පිළිබඳව මනාව දැනුවත්ව සිටියාය. ඇය බහුශ්‍රැත අයකු මෙන්ම , ඉංග්‍රීසි හා දෙමළ යන භාෂා දෙකෙහිම චතුර කාන්තාවක් වූවාය.

ඇයගේ ඛේදජනක මරණයේ පසුබිම දැන් ජනතාව මෙන්ම අපගේ සංවිධානය විසින්ද ප්‍රශ්න කරනු ලබයි. ඇය දේශපාලන, කලා සහ සාහිත්‍ය කටයුතුවල නිරත වූවාය. මෙය ඇයගේ පවුලට සහ ඇය ඉගැන්වූ තරුණ තරුණියන්ට කෙබඳු අර්ථයක් ගෙන දෙනු ඇතිද යන්න වචනයෙන් කිව නොහැකි බරකි.

මෙම මොහොතේ, වනිතා සේනාධිරාජාගේ පවුලේ අය, ඥාතීන් සහ මිතුරන් සමඟ අපි ද එක්ව සිටින අතර, ඔවුනට අපගේ සාතිශය සංවේගය පළ කරමු.

වනිතා සේනාධිරාජාට සන්නද්ධ අරගලය හා සම්බන්ධ කිසිදු පසුබිමක් නොතිබිණි. අප දන්නා තරමින්, ත්‍රස්තවාදය වැළැක්වීමේ පනත හෝ වෙනත් කිසිදු ශ්‍රී ලංකා නීතියක් යටතේ ඇයට එරෙහිව කිසිදු ක්‍රියාමාර්ගයක් ගෙන නොතිබූ අතර, එවැනි කිසිදු අනතුරු ඇඟවීමක් ඇය අපට දන්වා නොතිබිණි. එසේ වුවද, වර්තමාන වාතාවරණය තුළ මානව හිමිකම් ආරක්ෂකයන් ඉලක්ක කරනු ලබන බැවින්, ඇයගේ මරණය පිළිබඳ නිසි පරීක්ෂණයක් අදාළ බලධාරීන් විසින් පැවැත්වීම අවශ්‍ය වේ.

මින්නේරිය ප්‍රදේශය පිළිබඳව, විශේෂයෙන්ම ශ්‍රී ලංකා හමුදාව හා සම්බන්ධව දන්නා කරුණු සැලකීමේදී, ඇයගේ මරණය බරපතළ සැකයන් මතු කර තිබේ. අතීතයේදී එහි වධ හිංසා කඳවුරු ක්‍රියාත්මක වූ බව එක්සත් ජාතීන්ගේ මානව හිමිකම් වාර්තා සහ ජාත්‍යන්තර මානව හිමිකම් සංවිධාන වාර්තා කර ඇත. එම කඳවුරු ශ්‍රී ලංකා හමුදාව, පැරා-මිලිටරි කණ්ඩායම් සහ සුදු වෑන් පැහැරගැනීම්වලට සම්බන්ධ සැඟවුණු පාර්ශ්ව විසින් පවත්වාගෙන ගිය බව ද ඔවුහු සඳහන් කර ඇත.

පොලිසිය සහ නීතිමය බලධාරීන් කරුණු දෙකක් සම්බන්ධයෙන් සිය යුතුකම කැපවීමෙන් ඉටු කරනු ඇතැයි සියලු දෙනා අපේක්ෂා කරති. ඇයගේ මරණයට අදාළ සාක්ෂි පිළිබඳ වෝහාරිකො විශ්ලේෂණයක් ඔවුන් සිදු කළ යුතුය. ඇය මියගිය ස්ථානයේ තිබී හමු වූ ලිපියේ සත්‍යතාව ද ඔවුන් තහවුරු කළ යුතුය. ශ්‍රී ලංකා රාජ්‍යයේ ඉහළම මට්ටම්ධාරීන් ක්‍රියා කිරීමට අපොහොසත් වුවහොත්, ඔවුන් මුහුණ දෙන සැකයන් තවත් වර්ධනය වනු ඇත.

මෙකී ආයතන ඊළම් දෙමළ ජනයා සම්බන්ධයෙන් සාධාරණව ක්‍රියා නොකරන බව ලෝකය දනී. එබැවින්, ජාත්‍යන්තර මට්ටමින් මෙම මරණය කෙරෙහි උපරිම අවධානය යොමු කර ප්‍රමාදයකින් තොරව ක්‍රියා කරන ලෙස අපගේ සංවිධානය වෙනුවෙන් සියලු මානව හිමිකම් ආයතනවලින් අපි ඉල්ලා සිටිමු.

වනිතා සේනාධිරාජා ජනතාවගේ අදහස් හා මත රැස් කර ඉදිරිපත් කළාය. ඉදිරියට යා හැකි එකම සැබෑ හා අර්ථවත් මාර්ගය වන්නේ ඒවා මත පදනම්ව යෝජනාව අවසන් කිරීමයි. එය දැන්ම සිදු කරන ලෙස අපි සියලු අදාළ පාර්ශ්වවලින් ඉල්ලා සිටිමු.

මීට අමතරව, සියලු අදාළ පාර්ශ්ව සමග සාකච්ඡා කළ පසු, ETRA පිහිටුවීම සඳහා වන ඊළඟ පියවර අපි නිවේදනය කරන්නෙමු.

ඊළම් දෙමළ අයිතිවාසිකම් සභාව වෙනුවෙන්,

පූජ්‍ය ලූක් ජෝන් පියතුමා
ETRA මඩකළපුව දිස්ත්‍රික් කාර්ය සාධක කමිටුව

05/10/2026
තුරෛරාවා කවේන්තිරන්
ETRA උතුරු ඇමරිකානු සම්බන්ධීකාරක